புதுச்சேரி அரசு
பள்ளிக்கல்வி இயக்ககம்
********

புதுச்சேரி. 22.11.2017

## செய்திக்குறிப்பு

புதுடில்லியில் உள்ள மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் 2017-2018 கல்வி ஆண்டிற்கான தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் தேர்வு மற்றும் தேசியதிறனறித் தேர்வு (முதல் நிலை) முறையே எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கு கடந்த 18-11-2017 சனிக்கிழமை புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பகுதிகளிலும் 26 மையங்களில் புதுச்சேரி பள்ளிக் கல்வி இயக்ககத்தால் தேர்வு நடத்தப்பட்டது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பகுதிகளில் இருந்து தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் தேர்விற்கு 2395 மாணாக்கர்களும் மற்றும் தேசியதிறனறித் தேர்விற்கு (முதல் நிலை) 5263 மாணாக்கர்களும் தேர்வு எழுதினர்.

இத்தேர்வுகளுக்கான கேள்வித்தாள் மற்றும் விடை (answer key) புதுச்சேரி பள்ளிக் கல்வி இயக்கக இணையதள முகவரியான schooledn.puducherry.gov.in இல் வெளியிடப்பட்டுள்ளது. விடைகளில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வரும் 29-11-2017 க்குள் jd-edn.pon@nic.in எனும் மின்னஞ்சல் முகவரியில் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

24/11/17
ஜெ. கிருஷ்ணராஜு
இணை இயக்குநர்

இச்செய்திக் குறிப்பினை தங்கள் நாளேட்டில் /தொலைக்காட்சியில் வெளியிட/ஒளிபரப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

24/11/17
ஜெ. கிருஷ்ணராஜு
இணை இயக்குநர்